செ.வெ.எண்: 47 / ஏப்ரல் /2020 நாள்: 16.04.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் COVID-19 தொற்று பரவுவதை தடுத்திடும் வகையில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் காரணமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலமாக அறிவுசார் குறைபாடுடையோர், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்கள் மற்றும் தங்கும் வசதிகளுடன் கூடிய சிறப்புப்பள்ளிகளில் தங்கியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு ஆவின் நிறுவனத்தின் மூலமாக பால் பொருட்களால் தயாரிக்கப்பட்ட பிஸ்கட் வகைகள் மற்றும் குளிர்பானம் அடங்கிய பெட்டகம் வழங்கப்பட்டது.**

---------------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் COVID-19 தொற்று பரவுவதை தடுத்திட ஏதுவாக 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலமாக தங்கும் விடுதி வசதியுடன் செயல்படும் அறிவுசார் குறைபாடுடைய சிறப்புப்பள்ளிகள், இல்லங்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 393 மாற்றுத்திறனாளிகளுக்கு ஆவின் நிறுவனத்தின் மூலமாக பெறப்பட்ட பால் பொருட்களில் தயாரிக்கப்பட்ட பிஸ்கட் வகைகள் மற்றும் குளிர் பானங்கள் அடங்கிய பெட்டகங்கள் மாவட்ட ஆட்சித்தலைவா் அவா்களின் அறிவுரையின்படி 11.04.2020 அன்று 5 இல்லங்கள் மற்றும் 4 சிறப்புப்பள்ளிகளுக்கு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலரால் நேரில் சென்று உரிய பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

மேலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம் வட்டம், மணிகண்டம் ஊராட்சி, ஆலம்பட்டி புதூர், நாகமங்கலம் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு மற்றும் காந்தி நகர் பார்வையற்றோர் குடியிரப்புகளில் 200 பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் என 600 நபர்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் 27.03.2020 முதல் IRCTC இரயில்வே பாதுகாப்பு படை மூலமாக தினமும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் கட்டணமில்லா தொலைபேசி மூலமாக மாற்றுத்திறனாளிகளிடம் பெறப்படும் கோரிக்கைகளான மளிகைப்பொருட்கள் மற்றும் இதர உதவிகளின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி வருவாய் துறையின் மூலமாக சம்பந்தப்பட்ட சார் ஆட்சியர் முசிறி, ஸ்ரீரங்கம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்கள் லால்குடி மற்றும் திருச்சிராப்பள்ளி அவர்களின் மேற்பார்வையில் சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியர்கள் மூலமாக ஆய்வு செய்து துரிதமாக இதுவரை 1003 மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளுக்கு உடனடியாக மளிகை பொருட்கள் மற்றும் பிற உதவிகள் வழங்கப்பட்டுள்ளது..

**வெளியீடு**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**